# உயர்கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண். 20

## அறிவிப்புகள்
## 2014–2015

திரு. பி. பழனியப்பன்
உயர்கல்வித் துறை அமைச்சர்

## 1. தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் காணொலிக் காட்சி ஒளிபரப்பு மையங்கள் நிறுவுதல்.

## (Establishment of video conferencing broadcasting Centres in Polytechnic Colleges and Engineering Colleges in Tamil Nadu)

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் தரத்தினை உறுதி செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளதை கருத்திற் கொண்டு, 20 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 10 பொறியியல் கல்லூரிகளில் ஊடாடு காணொலிக் காட்சி ஒளிபரப்பு மையங்கள் ரூ.30 இலட்சம் செலவில் நிறுவ, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இம்மையங்கள், பட்டறிவு மிக்க ஆசிரியர்களால் நடத்தப்படும் வகுப்பறைப் பாடங்களை ஒளிப்பரப்புவதில் இணைப்பு மையங்களாக செயல்படும். இந்த ஒளிபரப்புச் சேவையை அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும் செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள் வழியாகப் பெறுவதற்கு உதவிபுரிந்து, தொலைதூர மற்றும் கிராமப்புறங்களிலுள்ள கல்வி நிறுவனங்களில் பயிலும்

மாணவ, மாணவியர் அறிவு சார்ந்த கற்றல் சூழலின் பலன்களைப் பெறவும் இம்மையங்கள் வழிவகுக்கும்.

## 2. பிரிட்டிஷ் கவுன்சில் தயாரித்த உயிரோட்ட இயக்கப் படங்களைக் கொண்ட வேலைதேடுவோருக்கான தொகுப்பினை பொறியியல் கல்லூரிகளுக்கு வழங்குதல்.

## (Distribution of British Council Job Seeker series of Animated Videos to Engineering Colleges)

பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் உள்ள ஏறக்குறைய 350 பொறியியல் கல்லூரிகளுக்கு பிரிட்டிஷ் கவுன்சில் தயாரித்த உயிரோட்ட இயக்கப்படங்களைக் கொண்ட வேலை தேடுவோருக்கான தொகுப்பினை ரூ.3.5 இலட்சம் செலவில் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** பொறியியல் கல்லூரி மாணவர்கள் தங்களது மென்திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும், அவர்கள் பணிபுரியும் இடங்களில் எதிர்கொள்ளும் சவால்களை திறமுடன் கையாளவும், தன்னம்பிக்கையுடன் தகுதியுடையவர்களாக தங்களை மாற்றிக்கொண்டு, வெற்றி பெறுவதற்கும் இத்தொகுப்பு வழிவகுக்கும்.

## 3. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் ‘இ–யந்த்ரா’ ரோபாடிக்ஸ் ஆய்வகங்கள் நிறுவுதல்.

## (Establishment of ‘E-YANTRA’ Robotics Laboratories in Polytechnic Colleges and Engineering Colleges)

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காக, 10 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 6 அரசு பொறியியல் கல்லூரிகளில் ‘இ–யந்த்ரா’ ரோபாடிக்ஸ் ஆய்வகங்களை ரூ.80 இலட்சம் செலவில் நிறுவ, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இதன் மூலம், மாணவர்களும், ஆசிரியர்களும் கணினி நிரலாக்கம் குறித்த நடைமுறை பயன்பாடுகள் மற்றும் பொறியியல் கோட்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ளவும், மாணவ, மாணவியர் ரோபோக்களை கையாள்வதற்கும் மற்றும் சிறிய வகை ரோபோக்களை உருவாக்குவதற்குமான பயிற்சியினையும் பெற இயலும்.

## 4. தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு உள்ளூர் சூழலுக்கேற்ப இருமொழி பாடப்புத்தகங்கள் மற்றும் ஒளி - ஒலி குறுந்தகடுகள் வழங்குதல்.

## (Distribution of Bilingual Material based on Local Context with Video CD's to Polytechnic Colleges in Tamil Nadu)

தகவல் மற்றும் தொழில்நுட்பம், உயர்நிலையை அடைந்துள்ள இக்காலகட்டத்தில், பேச்சுத்திறன்கள், குறிப்பாக ஆங்கிலத்தில் பேசும் திறன் முக்கியத் தேவையாகவுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் தங்களது ஆங்கில பேச்சுத்திறனை மேம்படுத்திக்கொள்வதற்காக, உள்ளூர் சூழலுக்கேற்ப இருமொழி பாடப்புத்தகங்கள் (தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடிய ஆங்கிலம்) மற்றும் ஒளி – ஒலி குறுந்தகடுகள் **140** பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு சுமார் ரூ.**6.30** இலட்சத்தில் முதற்கட்டமாக வழங்க, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 5. 6 அரசு பொறியியல் கல்லூரிகளில் சூரிய மின்சக்தி சாதனங்களை நிறுவுதல்.

## (Provision of Solar Power Systems in 6 Government Engineering Colleges)

சூரிய மின்சக்தியை, கல்வி நிறுவனங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற அரசின் கொள்கையை செயல்படுத்தும் வகையில், **6** அரசு பொறியியல் கல்லூரிகளில் **10** கிலோவாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி சாதனங்களை ரூ.**60** இலட்சம் செலவில் நிறுவ, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 6. 8 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள விடுதிகளுக்கு அறைகலன்கள் மற்றும் சமையல் உபகரணங்கள் கொள்முதல் செய்தல்.

## (Procurement of Furniture and Utensils for newly constructed Hostels in 8 Government Polytechnic Colleges)

தருமபுரி, கரூர், பெரம்பலூர், திருவாரூர், திருவண்ணாமலை, தேனி, விழுப்புரம் மற்றும் மேலூர் ஆகிய 8 இடங்களில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவ்விடுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, ஒரு கல்லூரிக்கு ரூ.7 லட்சம் வீதம் மேற்கண்ட 8 கல்லூரிகளுக்கு மொத்த செலவினமாக ரூ.56 இலட்சத்தில் அறைகலன்கள் மற்றும் சமையல் உபகரணங்களை கொள்முதல் செய்ய, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 7. கோயம்புத்தூர், அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான பயிற்சி மையம் நிறுவுதல்.

## (Establishment of Faculty Training Centre in Government College of Technology, Coimbatore)

தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் திறனை மேம்படுத்தி, மாணவ, மாணவியர் தரம் வாய்ந்த கல்வியை பெற கோயம்புத்தூர், அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் விடுதி வசதிகளுடன் ஆசிரியர்களுக்கான பயிற்சி மையம் ஒன்றை ரூ.9 கோடி செலவில் நிறுவ, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 8. இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவுடன் இணைந்து கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் மென்பொருள் அடைகாப்பு மையம் உருவாக்குதல்.

## (Establishment of Software Incubation Centre (SIC) at Government College of Technology, Coimbatore in Collaboration with Software Technology Parks of India)

நவீன அறிவியல் வளர்ச்சியினை பரவலாக்கும் நோக்கத்தோடு, கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி, இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவுடன் இணைந்து, அக்கல்லூரி வளாகத்தில் மென்பொருள் அடைகாப்பு மையம் ஒன்றை நிறுவுவதற்கு, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 9. அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் நிறுவுதல்.

## (Establishment of Parasports Centre in Alagappa University)

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு கழகம் மற்றும் இந்திய மாற்றுத் திறனாளிகள் குழுவின் இணைவுபெற்ற மதுரை, மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு தேசிய கல்விக் கழகம், அழகப்பா பல்கலைக்கழகத்தின் உடற்பயிற்சி கல்லூரியுடன் இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்தை ரூ.**65** இலட்சம் செலவில் உருவாக்க, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மாலைநேரக் கல்லூரி தொடங்குதல்.

## (Starting of Evening College under Manonmaniam Sundaranar University)

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகருக்கு அருகில் உள்ள சாந்திநகரில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மாலைநேரக் கல்லூரி ஒன்றினை 2014–15ஆம் கல்வியாண்டு முதல் தொடங்க, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இக்கல்லூரியில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய பாடப்பிரிவுகளுடன் ஆங்கிலம், கணிதம், கணினி அறிவியல், வணிகம் போன்ற பாடப்பிரிவுகளும் தொடங்கப்படும்.

## 11. அண்ணா பல்கலைக்கழகத்தின் பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவன திருச்சிராப்பள்ளி வளாகத்தில் மென்பொருள் அடைகாக்கும் மையம் ஒன்றை நிறுவுதல்.

## (Establishment of a Software Incubation Centre (SIC) of Anna University, at the Bharathidasan Institute of Technology Campus, Tiruchirappalli)

தொழில்நுட்ப பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழக மாணவ, மாணவியர் நலனுக்காக, நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவனம் வளாகத்தில் இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவுடன் இணைந்து ஒரு மென்பொருள் அடைகாக்கும் மையத்தை நிறுவுவதற்கு, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 12. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மென்பொருள் அடைகாப்பு மையம் நிறுவுதல்.

## (Establishment of Software Incubation Centre (SIC) in Manonmaniam Sundaranar University)

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் மற்றும் தென் மாவட்டங்களில் கணினி துறையில் பணிபுரிவோர் பயன்பெற ஏதுவாக, இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்காவுடன் இணைந்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மென்பொருள் அடைகாப்பு மையம் ஒன்றை நிறுவுவதற்கு, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**